# விலைகள், கூலிகள், தொழில்நிலை

## பொதுவான விலைமாற்றங்கள்

1992 இல் அவதானிக்கப்பட்ட விலை அதிகரிப்பு வீதத்தின் மிதமான போக்கில் சிறிதளவு எதிர்மாறான தன்மையொன்று 1993 இல் அவதானிக்கப்பட்டது. 1993 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி 1992 இன் 11.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11.7 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் (1992 திசெம்பரைவிட 1993 திசெம்பரில்) சுட்டெண் 1992 இன் 13.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.3 சதவீதமான குறைந்த அதிகரிப்பினைப் பதிவு செய்தமை எதிர்காலத்தில் பண வீக்கம் இலகுவாகக்கூடிய சாத்தியத்தினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. பரந்தளவு புவியியற் பரப்பையும் விடயங்களையும் உள்ளடக்கி, கொ. நு. வி. சுட்டெண்ணிலும் பார்க்கக் கூடுதலான உண்மைத்தன்மையைக் கொண்டுள்ள கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண் 1993 இல் 8.4 சதவீதமான அதிகரிப்பினை மட்டுமே பதிவுசெய்தது. இது முன்னைய ஆண்டில் கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (கொ. பெ. நு. வி. சு) பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பு வீதத்திலிருந்தும் (9.4 சதவீதம்) வரவேற்கத்தக்க வீழ்ச்சியாகும். கொ. நு. வி. சுட்டெண்ணினதும் கொ. பெ. நு. வி. சுட்டெண்ணினதும் நடத்தையினது வேறுபாட்டிற்கு இவ்விரு சுட்டெண்களினதும் முக்கிய விடயங்களின் நிறைகளினது வேறுபாடே பெருமளவு காரணமாகும். மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1992 இன் 8.8 சதவீத அதிகரிப்புடன்

அட்டவணை 1.38

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100)**

| விடயம் | சராசரி | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப்புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1991 இற்கு மேலாக 1992 | 1992 இற்கு மேலாக 1993 | 1991 திசெம்பருக்கு மேலாக 1992 திசெம்பர் | 1992 திசெம்பருக்கு மேலாக 1993 திசெம்பர் |
| எல்லா விடயங்களும் ... | 1,260.4 | 1,408.4 | 11.4 | 11.7 | 13.8 | 10.3 |
| பண்ட வகைப்படி | | | | | | |
| உணவு ... | 1,366.0 | 1,519.4 | 11.9 | 11.2 | 14.6 | 10.0 |
| உடை ... | 723.6 | 782.7 | 6.7 | 8.2 | 5.1 | 8.0 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 2,334.3 | 2,730.0 | 3.6 | 17.0 | 3.2 | 27.3 |
| வாடகை ... | 109.8 | 109.8 | - | - | - | - |
| பல்வகை ... | 1,318.7 | 1,490.4 | 15.1 | 13.0 | 19.5 | 5.1 |

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி.

ஒப்பிடுகையில் 1993 இல் 7.6 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்து முதலாந்தரச் சந்தை மட்டங்களிலும் விலை அதிகரிப்புக்கள் குறைந்து செல்வதனை எடுத்துக்காட்டியது.

1993 இன் விலைகளில் குறிப்பிடத்தக்க பருவகால அசைவுகள் அவதானிக்கப்பட்டன. வேளாண்மைத் துறையில், குறிப்பாக நெல் மற்றும் துணை உணவுப்பயிர்த் துணைத்துறைகளில் காணப்பட்ட சாதகமான நிலைமைகள் சந்தையில் முக்கிய பண்டங்களின் வழங்கல்களை அதிகரித்து அறுவடைக் காலங்களில் தாழ்ந்த விலைகளைத் தோற்றுவித்தன. பெப்புருவரி - ஏப்பிறல் காலப் பகுதியிலும் மீண்டும் செத்தெம்பரிலும் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு முறையே பெரும்போக, சிறுபோக அறுவடைகளின் தாக்கமே காரணமாகும். ஆண்டின் இறுதி மாதங்களில் பருவகாலக் காரணிகளும் அதேபோன்று பாதகமான வானிலை நிலைமைகளும் விலைகளின் உயர்விற்கு காரணமாயின.

உணவு ஆணையாளரினூடாக வழங்கப்பட்ட கோதுமை மாவின் விலை யூனிலும் மீண்டும் ஒற்றோபர், நவெம்பரிலும் சிறிதளவு திருத்தியமைக்கப்பட்டது. இது பாணின் விலைகள் உயரக் காரணமாயிற்று. மேலும் மண்ணெண்ணெயின் விலை யூனில் திருத்தியமைக்கப்பட்டது. இவ்வாண்டில் மின்வலு மீதான தீர்வை திருத்தியமைக்கப்பட்ட வேளையில் தன்னியக்க டீசலின் விலைகளும் இவ்வாண்டில் பல தடவைகள் மிதமாக திருத்தியமைக்கப்பட்டன. 1993 இல் டொலருக்கெதிராக ரூபா மேலும் 7 சதவீதத்தினால் தேய்வடைந்தமை, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளை உயரவைத்தது. இக்காரணிகள், முன்னேற்றம் கண்ட வேளாண்மைச் செயலாற்றத்தின் காரணமாக விலைகளில் ஏற்பட்ட கீழ்நோக்கிய தாக்கத்தினை எதிரீடு செய்வதற்கு வழியமைத்தன.

கேள்விப் பக்கத்தில், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களினதும் உள்நாட்டுக் கொடுகடனினதும் அதிகரிப்புக் காரணமாக, பண நிரம்பலில் ஏற்பட்ட வளர்ச்சியின் விரிவுத் தாக்கம் விலை மட்டத்திலும் உணரப்பட்டது. மேலும் நன்கமைந்த தனியார் துறையில் உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களின் விளைவாகத் தோன்றிய கேள்வி அழுத்தங்கள், விலைகளை மேல்நோக்கி அசைவதற்கு வழியமைத்தன. விலைமட்டத்தில் கேள்வியின் அழுத்தத்தினைக், கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி தொடர்ந்தும் கட்டுப்பாடான நாணயக் கொள்கையை நாடியது. வர்த்தக வங்கிகளின் வைப்புக்கு எதிரான ஒதுக்கு விகிதங்களின் அதிகரிப்பு, தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், 1993 ஒற்றோபரிலிருந்து மத்திய வங்கி அதன் சொந்தப் பிணைகளை வழங்கியமை என்பன திரவநிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட வழிமுறைகளில் அடங்கியிருந்தன.

## விலைகள்

### நுகர்வோர் விலைகள்

1993 இல் விலைகளின் பொதுவான சராசரியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு, எரிபொருள், வெளிச்சம் மற்றும் ஆடைவகைகளிலுள்ள விடயங்களின் விலைகள் 1992 இல் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்புகளுடன் ஒப்பிடுகையில் மிகக் கூடியளவில்

அதிகரித்தமையே காரணமாகும். உணவு விலைகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவான அதிகரிப்புகளைப் பதிவுசெய்த வேளையில் பல்லின வகையிலுள்ள விடயங்களின் விலைகளும் 1992 இனைவிட மெதுவான வீதத்திலேயே உயர்வடைந்தன.

சுட்டெண்ணில் பெரும் பங்கிற்கு வகைகூறிய உணவு விலைகள் பொதுவான விலை அதிகரிப்பில் 66.7 சதவீதத்திற்குக் காரணமாயின. விலைகளின் பொதுவான அதிகரிப்பிற்கு ஆடைகள், எரிபொருளும் வெளிச்சமும், பல்வகை விடயங்களினது விலைகள் என்பனவற்றின் பங்களிப்பு முறையே 3.8 சதவீதமாகவும், 11.4 சதவீதமாகவும் 18.2 சதவீதமாகவும் இருந்தன. முன்னைய ஆண்டில் சுட்டெண்ணின் மொத்த அதிகரிப்பில், உணவு 73 சதவீதமான உயர்ந்த விகிதத்திற்கு பங்களித்திருந்தமை கவனிக்கத்தக்கதொன்றாகும்.

1993 இல் உணவுத் துணைச் சுட்டெண் 11.2 சதவீதத்தினால் உயர்வடைந்து 1992 இன் 11.9 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் ஓரளவு குறைவான அதிகரிப்பாகக் காணப்பட்டது. நெல் மற்றும் மிளகாய், காய்கறி போன்ற துணை உணவுப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தி முன்னேற்றமடைந்தமை இவ்விடயங்களின் விலைகளில் மிதமானதன்மையைத் தோற்றுவித்தது. இவ்வாண்டுக் காலத்தில் அரசின் விலை மிதமாக அதிகரித்த வேளையில், செத்தல் மிளகாயின் விலை 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும் இவ்வாண்டில் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாகத் தேங்காயின் விலை 16 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக அதிகரித்தது. கோதுமைமாவின் விலை 1993 யூனில் ரூ. 11.75 இலிருந்து ரூ. 13.10 இற்கு அதிகரித்தது. இது ஒற்றோபரில் மேலும் 10 சதத்தினாலும், நவெம்பரில் இன்னுமொரு 10 சதத்தினாலும் அதிகரிக்கப்பட்டது. கோதுமைமா விலைகளின் திருத்தமும் அதன் விளைவாக பாணின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் சுட்டெண்ணில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தன. 1993 இல் கோதுமை மா, பாண் விலைகள் மட்டும் தனித்து பொதுவான சுட்டெண்ணின் உயர்வில் 6.0 சதவீதத்திற்கும் உணவு துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்பில் 9.0 சதவீதத்திற்கும் வகைகூறின. மேலும், வலு விலைகளின் திருத்தமும் போக்குவரத்துச் செலவு, உற்பத்திச் செலவு என்பனவற்றினூடாக உணவு விலைகளின் மீது மறைமுகமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கக்கூடும். டொலருக்கெதிராக ரூபா தேய்வடைந்தமையும் சீனி போன்ற இறக்குமதி விடயங்களின் விலை உயரக் காரணமாயிருந்தது. முன்னேற்றமடைந்த உள்நாட்டு வழங்கல் மூலம் அடையப்பட்ட மிதமான விலையின் நன்மைகளை இம்மாற்றங்கள் இல்லாமல் செய்துவிட்டன.

1993 இல் எரிபொருள் மற்றும் வெளிச்சத்திற்கான துணைச் சுட்டெண் 1992 இன் 3.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 17.0 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இவ்வகையில், மண்ணெண்ணெயின் விலை யூனில் 34 சதவீதத்தினால் அதிகரித்தது. மின் வலுவிற்கான தீர்வையின் அதிகரிப்பும் 1993 யூலையிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இத்திருத்தத்தின்கீழ் அலகொன்றிற்கான ஆகக் குறைந்த தீர்வை 55 சதத்திலிருந்து 60 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. (கொ. நு. வி. சுட்டெண் ஏழைக் குடும்பங்களின் நுகர்வுப் போக்கைப் பிரதிபலிப்பதால், ஆகக்குறைந்த தீர்வைகளின் அதிகரிப்பு மட்டுமே சுட்டெண்ணில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தும்.) ஆண்டுக்காலத்தில் விறகு

விலைகளும் அதிகரித்தன. தன்னியக்க டீசலின் விலைகளின் மீளமைப்பு, பலமாத காலமாக நிலைகுலைந்து முழு ஆண்டுக்குமான சராசரி 4.0 சதவீதமாக இருந்தது. கொ. நு. வி. சுட்டெண்ணில் தன்னியக்க டீசல் உள்ளடக்கப்படாவிடினும் அதிகரித்த போக்குவரத்துச் செலவுகள் மூலம் முழு மொத்தச் சுட்டெண்ணில் அதன் மறைமுக விளைவை உணரக்கூடியதாக இருக்கலாம்.

1993 இல் உடைக்கான துணைச் சுட்டெண்ணை 1992இன் 6.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8.2 சதவீத்தினால் அதிகரித்தது. 1993 இல் பல்வகை விடயங்களின் விலைகள் 1992 இன் 15.1 சதவீதத்துக்கெதிராக 13.0 சதவீதத்தால் அதிகரித்தன. ஆண்டுக் காலத்தில், இத்தொகுதிக்குள்ளே மதுபானம், புதினத்தாள், குளியல் அறைச் சாதனங்கள், சலவைக் கட்டணங்கள் என்பனவற்றுக்கான விலைகளில் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

## கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் "நிருவகிக்கப்பட்ட விலைகளின்" தாக்கம்

1992 செத்தெம்பர் 30 தொடக்கம், கோதுமை மாவும் பாணும் விலைக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கப்பட்டிருந்தன. (தற்போது மருந்து வகைகள் மட்டுமே, விலைக் கட்டுப்பாட்டின் கீழுள்ள விடயமாகும்.) ஆயினும் கூ. மொ. விற்பனை நிலையம் பொதுத் திறைசேரியின் ஒத்திசைவுடன் கோதுமைமாவின் விலையைத் தீர்மானிக்கின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மண்ணெண்ணெயின் மொத்த விற்பனை விநியோகத்தில் தனியுரிமை இருப்பதுடன் அதன் விலையும் அமைச்சரவையின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

கோதுமை மா, பாண், மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலைகள் மாற்றமின்றியிருந்தால் 1993 இல் ஆண்டுச் சராசரிச் சுட்டெண்ணின் அதிகரிப்பு, உண்மையில் அடையப்பட்ட 11.7 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 10.4 சதவீதமாக அமைந்திருக்கும்.

## கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் 1989 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொழும்புப் பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணே அதன் தற்காலத்திற்கேற்ற எடைகள், பரந்த அளவிலான விடயம், புவிப் பரப்பளவுகள் என்பவை காரணமாக சில்லறை விலைகளின் பொதுமட்டத்தினது உண்மைமிக்க குறிகாட்டியாகக் கருதப்படுகின்றது. அலுவலக ரீதியான விலைச் சுட்டெண்ணாக கொ. நு. வி. சு. இன் இடத்தை இன்னும் கொ. பெ. நு. வி. சு. எடுத்துக்கொள்ளாவிடினும் இது தொடர்ந்து கணிக்கப்பட்டு கொ. நு. வி. சுட்டெண்ணுடன் சேர்த்து வெளியிடப்படுகின்றது.

கொ. பெ. நு. வி. சு. இன் எடைகள், 1985 - 86 இல், குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட தொழிற்படை சமூக பொருளாதார மதிப்பீட்டில் வெளியிடப்பட்டவாறு, கொழும்புப் பெரும்பாகப் பகுதியில் செலவு

ரீதியாக வரிசைப்படுத்தப்பட்டபோது தாழ்மட்டத்திலிருந்த 40 சதவீத குடும்பங்களின் செலவுப் போக்கை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவ்வெண்ணின் விடய அளவு, புவிப்பரப்பளவு ஆகிய இரண்டும் (கொழும்புப் பெரும்பாக பகுதிவரை விரிந்து கொ. நு. வி. சுட்டெண்ணினதைவிடக் கூடுதலாகப் பரந்து விளங்கின.

கொ. பெ. நு. வி. சுட்டெண் 1992 இல் இருந்து 9.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 8.4 சதவீதத்தால் அதிகரித்தது. 1993 திசெம்பர் இறுதியில் புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் இச்சுட்டெண்ணின் அதிகரிப்பு 6.9 சதவீதமாக இருந்தது. கொ. பெ. நு. வி. சுட்டெண்ணில் உணவு, உடையும் காலணியும், எரிபொருளும் வெளிச்சமும் ஆகிய விடயங்களின் விலைகளில் அதிகரிப்புக்கள் முறையே 8.7 சதவீதமாகவும், 8.2 சதவீதமாகவும், 17.0 சதவீதமாகவும் இருந்தன. குடிவகை, புகையிலை, வெற்றிலை, பாக்கு, தனிமனிதர் பேணலும் சுகாதாரப் பணிகளும், வீட்டுப் பாவனைப் பொருட்களும் பணிகளும் போக்குவரத்தும் தொடர்பூட்டலும், பலவகை விடயங்கள் ஆகியவற்றுக்கான துணைச் சுட்டெண்களின் வளர்ச்சிகள் முறையே 13.3 சதவீதமாகவும், 8.3 சதவீதமாகவும், 1.1 சதவீதமாகவும், 2.9 சதவீதமாகவும் இருந்தன.

அட்டவணை 1.39

**கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்**

**(சனவரி - யூன் 1989 = 100)**

| விடயம் | சராசரி | | ஆண்டுச் சராசரி சதவீதமான மாற்றங்கள் | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1991 இற்கு மேலாக 1992 | 1992 இற்கு மேலாக 1993 | 1991 திசெம்பருக்கு மேலாக 1992 திசெம்பர் | 1992 திசெம்பருக்கு மேலாக 1993 திசெம்பர் |
| எல்லா விடயங்களும் | 152.0 | 164.8 | 9.4 | 8.4 | 11.5 | 6.9 |
| பண்டவகைப்படி உணவும் குடிபானமும் | 158.4 | 172.2 | 9.7 | 8.7 | 12.9 | 6.6 |
| குடிவகை, புகையிலை மற்றும் வெற்றிலை பாக்கு | 158.9 | 180.1 | 15.2 | 13.3 | 17.4 | 5.6 |
| வீடமைப்பு | 109.1 | 109.3 | 5.6 | 0.1 | 8.9 | 0.2 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 135.0 | 157.9 | 3.9 | 17.0 | 3.9 | 25.7 |
| ஆடையும் காலணியும் | 175.8 | 190.3 | 4.5 | 8.2 | 7.9 | 5.8 |
| தனியார் கவனிப்பும் நலப்பணிகளும் மற்றும் வீட்டுப் பொருட்களும் பணிகளும் | 143.0 | 154.9 | 12.5 | 8.3 | 9.6 | 7.5 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 161.7 | 163.5 | 10.9 | 1.1 | 13.8 | 1.2 |
| பல்வகை | 130.6 | 134.3 | 2.0 | 2.9 | 2.8 | 4.6 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

கொ. நு. வி. சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் கொ. பெ. நு. வி. சுட்டெண்ணினால் குறிக்கின்றவாறு 1993 இன் விலைகளிலுள்ள மெதுவான அதிகரிப்பு வீதத்துக்கு கொ. பெ. நு. வி. சுட்டெண்ணில் பாணுக்கும், கோதுமை மாவுக்கும் தாழ்வான எடைகளும், அரசிற்கு உயர்வான எடையும் அளிக்கப்பட்டமையே

முக்கிய காரணமாகும். 1993 இல் கோதுமை மாவுக்கும் பாணுக்கும் விலைகள் மேல்நோக்கி மீளவமைக்கப்பட்டிருந்ததுடன் இது கொ. நு. வி. சுட்டெண்ணில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தின. மேலும், மேம்பட்ட வேளாண்மை செயலாற்றத்துடன் அரிசி விலைகள் சிறிதளவினால் மட்டுமே அதிகரித்து கொ. பெ. நு. வி. சுட்டெண்ணில் மிதமான மாற்றத்தை ஏற்படுத்தின.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

மொத்த விற்பனை விலைச் சுட்டெண் முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவீடு செய்கின்றது. 1993 இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1992 இன் மட்டத்தைவிட 7.6 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1992 இல் பதிவு செய்யப்பட்டிருந்த 8.8 சதவீத அதிகரிப்பை விடக் குறைவானதாகும்.

சுட்டெண்ணின் அதிகரிப்புக்கு முழு மொத்தச் சுட்டெண்ணின் அதிகரிப்பில் 58 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்திருந்த உயர்வான உணவு விலைகளே முக்கிய காரணமாயிருந்தன. 1993 இன் உணவுத் துணைச் சுட்டெண் 1992 இன் 10.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1993 இல் 7.0 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்திருந்தது. ஏனைய துணைச் சுட்டெண்களில், உலோகமல்லா உற்பத்திகள் (15.5 சதவீதம்), உலோக உற்பத்திகள் (12.0 சதவீதம்), பொறிகள் (11.9 சதவீதம்) என்பனவற்றில் கணிசமான விலை அதிகரிப்புகள் பதிவுசெய்யப்பட்டன. உலோகமல்லா உற்பத்திகளின் விலைகளின் அதிகரிப்புக்கு, இவ்வாண்டில் கட்டடப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு குறிப்பாக செங்கட்டிகளில் பதிவு செய்யப்பட்ட விலை அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். உருட்டிய உருக்கு உற்பத்திகளின் விலை அதிகரிப்புகள் உலோக உற்பத்திகளுக்கான துணைச் சுட்டெண்ணின் அதிகரிப்புக்குப் பங்களிப்பைச் செய்தன. பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் என்பனவற்றின் விலைகளின் மீளமைப்புக் காரணமாக 1993 இல் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் 9.2 சதவீதத்தால் அதிகரித்தன.

ஆண்டுக்காலத்தில் உள்நாட்டுத் தொகுதியில் விலைகள் 5.8 சதவீதத்தால் அதிகரித்தவிடத்து, இறக்குமதித் தொகுதியில் விலைகள் 5.9 சதவீதத்தால் அதிகரித்தன. ஆண்டுக் காலத்தில் ஏற்றுமதி விலைகள் 11.4 சதவீத கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்த போதிலும் 1992 இல் பதிவுசெய்த 18.0 சதவீத அதிகரிப்பைவிடக் குறைவாகவே இது இருந்தது.

முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பின்படி 1993 இல் முக்கியமாகக் கட்டடப் பொருட்களின் விலைகளின் அதிகரிப்புக்கள் காரணமாக முதலீட்டுப் பொருட்களின் விலைகள் 13.7 சதவீதத்தால் கணிசமாக அதிகரித்தன. முன்னைய ஆண்டில் முதலீட்டுப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு 7.2 சதவீதமாயிருந்தது. நுகர்வுப் பொருட்களினதும் இடைநிலைப் பொருட்களினதும் விலைகளில் அதிகரிப்புகள் 1992 இன் 10.5 சதவீதத்துடனும் 3.4 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் முறையே 7.0 சதவீதமாகவும், 8.3 சதவீதமாகவும் இருந்தன.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 = 100

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.40

## மொத்தவிற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100)

| விடயம் | சராசரி | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1991 இனைவிட 1992 | 1992 இனைவிட 1993 | 1991 திசெம்பரை விட 1992 திசெம்பரில் | 1992 திசெம்பரை விட 1993 திசெம்பரில் |
| **பண்டவகைப்படி** | | | | | | |
| எல்லா விடயங்களும் ... | 773.0 | 831.8 | 8.8 | 7.6 | 8.0 | 7.7 |
| உணவு ... | 720.0 | 770.4 | 10.9 | 7.0 | 8.4 | 4.2 |
| வெறிக் குடிவகைகள் ... | 886.7 | 956.2 | 14.2 | 7.9 | 18.1 | 1.7 |
| புடவை, காலணிகள் ... | 418.7 | 452.1 | -1.8 | 8.0 | -2.0 | 10.4 |
| தாள் உற்பத்திகள் ... | 704.9 | 745.2 | -5.7 | 5.7 | -2.8 | 7.9 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் ... | 531.0 | 542.2 | 7.2 | 2.1 | 4.6 | -1.2 |
| பெற்றோலிய உற்பத்திகள் ... | 1,135.7 | 1,240.8 | 2.8 | 9.2 | 5.9 | 12.5 |
| உலோகமல்லா உற்பத்திகள் ... | 1,356.0 | 1,566.8 | 7.4 | 15.5 | 12.6 | 20.1 |
| உலோக உற்பத்திகள் ... | 588.4 | 659.1 | 3.9 | 12.0 | 5.7 | 16.5 |
| போக்குவரத்து கருவிகள் ... | 623.2 | 660.0 | 9.6 | 5.9 | 13.9 | 1.6 |
| மின் கருவிகளும் வழுங்கல்களும் ... | 603.3 | 635.4 | 0.5 | 5.3 | -2.6 | 9.4 |
| பொறிகள் ... | 440.4 | 492.7 | 7.5 | 11.9 | 10.5 | 13.4 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 1,290.5 | 1,307.5 | 0.1 | 1.3 | - | 8.8 |
| பல்வகை ... | 1,323.2 | 1,480.0 | 8.9 | 11.8 | 11.0 | 28.9 |
| **துறைவகைப்படி எண் I** ... | | | | | | |
| உள்நாட்டு வகை ... | 697.3 | 737.6 | 5.6 | 5.8 | 8.3 | 9.8 |
| இறக்குமதி வகை ... | 634.4 | 671.6 | 3.3 | 5.9 | -0.8 | 10.7 |
| ஏற்றுமதி வகை ... | 1,109.2 | 1,235.5 | 18.0 | 11.4 | 13.9 | 2.9 |
| **துறைவகைப்படி எண் II** ... | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் ... | 760.7 | 814.3 | 10.5 | 7.0 | 8.7 | 4.5 |
| இடைநிலைப் பொருட்கள் ... | 807.4 | 874.5 | 3.4 | 8.3 | 4.9 | 17.3 |
| முதலீட்டுப் பொருட்கள் ... | 824.9 | 938.3 | 7.2 | 13.7 | 11.7 | 16.7 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## கூலிகள்

1993 இல் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த சம்பள அளவுத் திட்டங்களின் மீளமைப்பைத் தொடர்ந்து இவ்வாண்டில் அரச துறையின் கூலிகள் துரிதமாக உயர்வடைந்தன. இத்துறையில் கூலி அதிகரிப்புகள் பணவீக்கத்துக்கும் மேலாக ஈடுசெய்யப்பட்டு, இதன் விளைவாக அரசதுறை ஊழியர்கள் உண்மைக் கூலிகளில் போதுமான அளவு சீர்திருத்தங்களை அடைந்தனர். நன்கமைந்த தனியார் துறைக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கணிசமான கூலி அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், இத்துறையில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த முழு

மொத்தக் கூலி அதிகரிப்புக்கு இது பொறுப்பாயிருந்தது. நன்கமையாத்துறையின் கூலி அதிகரிப்பு நன்கமைந்த துறையில் பதிவு செய்ததைவிடக் குறைவாக இருந்தவிடத்தும் தேயிலை, தெங்கு, நெல் பயிர்ச் செய்கைகள், சிறிய அளவிலான கட்டடவாக்கம் போன்ற பெரும்பாலான நடவடிக்கைகளில் உண்மைக் கூலிகள் மேம்பட்டதைக் கிடைக்கத்தக்க தகவல்கள் வெளிப்படுத்துகின்றன.

## அரசதுறை

*1993 சனவரியில் அரச ஊழியர்களுக்கான புதிய சம்பள அளவுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. எடுத்துரைக்கப்பட்ட சம்பள அதிகரிப்பு, கட்டம் கட்டமாக செயற்படுத்தப்பட்டது. ரூ. 3,000/- இலும் குறைவான தொடக்கச் சம்பளத்தைப் பெற்ற ஊழியர்கள் எடுத்துரைக்கப்பட்ட அதிகரிப்பில் 60 சதவீதத்தை 1993 சனவரி 01 ஆம் நாளிலிருந்தும் எஞ்சிய 40 சதவீதத்தை 1993 யூலை 01 ஆம்*

*அட்டவணை 1.41*

**கூலிவீதச் சுட்டெண்கள்**
**(1978 திசெம்பர் = 100)**

| | 1992 | | 1993 | | 1992 இனைவிட 1993 இல் சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் |
| **1. அரச ஊழியர்கள்** | | | | | | |
| i. எல்லா நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் | 507.2 | 96.4 | 622.1 | 105.6 | 22.7 | 9.5 |
| ii. சிற்றூழியர்கள் ... | 609.9 | 115.9 | 728.3 | 123.8 | 19.4 | 6.8 |
| iii. எல்லா மத்திய அரச ஊழியர்கள் ... | 557.6 | 106.0 | 675.5 | 114.8 | 21.1 | 8.3 |
| iv. பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 461.8 | 87.8 | 567.1 | 96.3 | 22.8 | 9.7 |
| **2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள்** | | | | | | |
| i. வேளாண்மைத் தொழிலாளர்கள் ... | 664.0 | 126.1 | 803.8 | 136.6 | 21.1 | 8.3 |
| ii. கைத்தொழில் வர்த்தக தொழிலாளர்கள் ... | 510.8 | 97.1 | 528.2 | 89.8 | 3.4 | -7.5 |
| iii. பணிகள் தொழிலாளர்கள் ... | 365.9 | 69.6 | 365.8 | 62.2 | – | -10.6 |
| iv. கூலி நிர்ணயசபை வர்த்தகத் தொழிலாளர்கள்... | 590.0 | 112.0 | 685.7 | 116.6 | 16.2 | 4.1 |

மூலங்கள் : தொழிற்றிணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

## கூலி வீதச் சுட்டெண்

1978 திசெம்பர் = 100

காலாண்டுதோறும்



நாளிலிருந்தும் பெற்றுக்கொண்டனர். ரூ. 3,000/ அல்லது அதிலும் கூடிய தொடக்கச் சம்பளத்தைப் பெற்ற ஊழியர்களுக்கு எடுத்துரைக்கப்பட்ட அதிகரிப்பில் 50 சதவீதம் 1993 சனவரி 01 அம் நாளிலிருந்து கொடுக்கப்பட்டு எஞ்சிய 50 சதவீதம் 1994 சனவரி 01 ஆம் நாளிளிலிருந்து கொடுபடுவற்கு இருந்தது. 1988 தொடக்கம் வழங்கப்பட்ட படிகளில், வாழ்க்கைச் செலவுப் படி தவிர்ந்த ஏனைய படிகள் யாவற்றுக்கும் பதிலாக சகல ஊழியர்களுக்கும் அவர்களது சம்பள மட்டங்களைக் கருத்திற் கொள்ளாது ரூ. 600/- ஐக் கொண்ட சிறப்பு மாதாந்தப் படி ஒன்று 1993 யூன் தொடக்கம் கொடுக்கப்பட்டது. முன்னர் வழங்கப்பட்ட சிறப்புப் படிகள், குறிப்பிட்ட எல்லைகளுக்குத் தாழ்வான சம்பள அளவுத் திட்டங்களிலிருந்த ஊழியர் வகையினருக்கு மட்டுமே கொடுக்கத்தக்கனவாக இருந்தன.

1993 ஆம் ஆண்டில் அரச துறையின் சம்பள மீளவமைப்புக்கள் அரச ஊழியர்களின் கூலிகளைக் கணிசமாக உயர்த்திவிட்டன. இவ்வாண்டில் சகல அரச ஊழியர்களுக்குமான பெயரளவுக் கூலி வீதச் சுட்டெண்,கடந்த ஆண்டின் 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 21.1 சதவீதத்தால் அதிகரித்தது. 1993 இல் அனைத்து அரச துறை ஊழியர்களுக்குமான உண்மைக் கூலிகள், 1992 இல் பதிவு செய்யப்பட்ட 6.4 சதவீத குறைவிற்கு மாறாக 8.3 சதவீதத்தால் மேம்பட்டன.

1993 இல் நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் அனைவருக்குமான கூலிவீதச் சுட்டெண் 22.7 சதவீதத்தால் அதிகரித்தவிடத்து சிற்றூழியர்களுக்கான அச்சுட்டெண் 19.4 சதவீதத்தால் அதிகரித்தது. 1992 இல் இவ்விருவகைகளுக்கான பெயரளவுக் கூலி அதிகரிப்புக்கள் முறையே 3.9 சதவீதமாகவும், 4.7 சதவீதமாகவும் இருந்தன. 1993 இல் நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் அனைவரையும் சிற்றூழியர்களையும் பொறுத்தமட்டில் உண்மைக்கூலி அதிகரிப்புகள் முறையே 9.5 சதவீதமாகவும், 6.8 சதவீதமாகவும் இருந்தன.

**நன்கமைந்த தனியார் துறை**

1993 இல் நன்கமைந்த தனியார்துறையில் சம்பந்தப்பட்ட கூலி வீதச் சுட்டெண்ணினால் அளவீடு செய்யப்பட்டவாறு கூலிநிர்ணய சபைக்கு உட்பட்ட தொழிலாளர்களுக்கான ஆகக்குறைந்த கூலிகள் முன்னைய ஆண்டின் 13.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 16.2 சதவீதத்தால் அதிகரித்தன. உண்மைக் கூலிகள் 1992 இன் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து 4.1 சதவீதத்தால் அதிகரித்தன. கூலி நிர்ணய சபையிலுள்ள தொழிலாளர்களுக்கான முழுமொத்தக் கூலிகளின் இவ்வதிகரிப்பு 1992 இன் 14.9 சதவீத்துடன் ஒப்பிடுகையில் 21.1 சதவீதமான கணிசமான கூலி அதிகரிப்பைப் பெற்றிருந்த வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களுக்கான (முழுமொத்தச் சுட்டெண்ணில் ஏறத்தாழ 66 சதவீதமான நிறையை பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கொண்டுள்ளனர்.) கூலிகளின் வளர்ச்சியில் பெரும்பாலும் பிரதிபலித்தது. 1993 இல் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலுமுள்ள தொழிலாளர்கள் 3.4 சதவீதக் கூலி வளர்ச்சியையே பெற்றிருந்தனர். 1992 இல் இவ்வகையிலுள்ள தொழிலாளர்களின் கூலிகள் 11.1 சதவீதத்தால் அதிகரித்தன. பணவீக்க வீதம் 11.7 சதவீதமெனக் கொள்ளுமிடத்து இது உண்மைக் கூலிகள் 7.5 சதவீதத்தால் குறைவடைந்தமையைப் பிரதிபலிக்கின்றது. 1993 இல் பணிகள் துறையிலுள்ள வேலையாட்களுக்கான பெயரளவுக் கூலிகள் தேக்க நிலையிலிருந்தன. இதன்

விளைவாக இவ்வகையினருக்கான உண்மைக் கூலிகள் 10.6 சதவீதத்தால் தேய்வடைந்தன.

இவ்வாண்டில், அரசுக்கு உடைமையான பெருந்தோட்டத் தொழிலாளர் களுக்கான கூலிகள் நாளுக்கு ரூ. 12/- கொண்ட வரவு செலவுத் திட்டப் படியினை வழங்கியதன் மூலம் மேனோக்கித் திருத்தப்பட்டன. 1992 நவெம்பரில் இருந்தவாறான மட்டத்திலேயே வாழ்க்கைச் செலவுப்படி தடுத்துவைக்கப்பட்டது. இவ்வாண்டில் ஆடைத்தயாரிப்பு, விசுக்கோத்து, தின்பண்டத் தயாரிப்பு, பாதுகாப்புப்பணிகள், பின்னல்துணித் தயாரிப்பு ஆகிய வேலைகளின் கூலிகளும் மேனோக்கித் திருத்தப்பட்டன. 1993 இல் வாயிற்காப்புப் பணிகளும் கூலி நிர்ணய சபையின் கீழ்க் கொண்டுவரப்பட்டன.

### நன்கமையாத்துறை

நாடளாவிய தரவுச் சேகரிப்பு அமைப்பின் கீழ் நெற் பயிர்ச் செய்கை, தேயிலை, இறப்பர், தெங்கு என்பனவற்றின் சிறு உடைமைத் தோட்டங்கள், சிறிய அளவிலான கட்டடவாக்கம் ஆகியவற்றிலுள்ள நடவடிக்கைகள் பற்றிய நாட்கூலிகள் மீதான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

நன்கமையாத்துறையிற் கூலிகள் பெயரளவு நியதிகளில் கணிசமாக அதிகரித்தன என்பதை 1993 இற்கான தற்காலிக தரவுகள் காட்டுகின்றன. தேயிலை, தெங்கு, நெல் ஆகிய பயிர்ச் செய்கைகளிலும் கட்டடவாக்கத்திலும் உள்ள பெரும்பாலான நடவடிக்கைகளில் உண்மைக் கூலிகள் முன்னேற்றம் அடைந்துள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளது. இறப்பர்ச் செய்கையிலும், மரங்களை வேருடன் பிடுங்குதல், துப்புரவாக்குதல், இறப்பர் பாலெடுத்தல் ஆகிய நடவடிக்கைகளில் உண்மைக் கூலிகள் முன்னேற்றமடைந்தன.

நெற்பயிர்ச் செய்கையின் பாரிய நடவடிக்கைகளில் கூலிகள் பெயரளவு நியதிகளில் 7 தொடக்கம் 19 சதவீதம் வரையான வீச்சு வீதங்களில் அதிகரித்தன. தெங்குப் பயிர்ச்செய்கையில் பெயரளவு கூலிகள் 11 தொடக்கம் 19 சதவீதத்தில் வேறுபடுகின்ற வீதங்களில் அதிகரித்தன. தேயிலைப் பயிர்ச் செய்கையின் பெயரளவுக் கூலி அதிகரிப்புக்கள் 11 தொடக்கம் 15 சதவீதமான வீச்சிலிருந்தமையுடன் கொழுந்துபறிக்கும் பெண் தொழிலாளிகள் அதியுயர்ந்த கூலி அதிகரிப்பான 15 சதவீதத்தை அடைந்திருந்தனர். கட்டடவாக்கத் தொழிற்பாடுகளில், கூலிகளின் அதிகரிப்புகள் 13 தொடக்கம் 17 சதவீதம் வரையான வீச்சிலிருந்தமையுடன் தேர்ச்சியற்ற வேலையாட்கள் 16 தொடக்கம் 17 சதவீத வரையான அதியுயர்ந்த கூலி அதிகரிப்பைப் பெற்றனர்.

## தொழில் நிலை

மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட அரசதுறைத் தொழில்நிலையின் ஆண்டு அளவீட்டின்படி அரச, அரசுசார் நிறுவனங்களை உள்ளடக்கிய அரசதுறையின் மொத்தத் தொழில் நிலை 1993 இன் இறுதியில் ஏறத்தாழ 13 இலட்சமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டிற்கும் மேலாக 0.3 சதவீதமான சிறிதளவு அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

1993 இல் மத்திய அரசிலும், மாகாண சபைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் தொழில்நிலை 3.4 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்குப் பள்ளிக்கூட ஆசிரியர்களையும் நலத்துறை சார்ந்தோரையும் தொழிலில் சேர்த்துக்கொண்டமையே பாரிய பங்களிப்புக் காரணியாகும். அரசதுணைத்துறையில் தகைமைத் தொழிலாளர், தொழில்நுட்ப, மற்றும் இவை தொடர்பான வேலையாட்களின் வகையிலுள்ள மொத்தத் தொழில் நிலையின் 73 சதவீதத்துக்கு வகைகூறிய பள்ளிக்கூட ஆசிரியர்கள் 7 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தனர். பல்கலைக்கழகங்களிற் பட்டம்பெற்று நியமிக்கப்படாது எஞ்சியிருந்த மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புது நியமனங்களின் விளைவாக 1993 இல் முக்கியமாக மருத்துவர்களின் எண்ணிக்கை 28 சதவீதத்தால் அதிகரித்தது. பணி வேலையாட்கள் வகையின் தொழில்நிலை 1 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. அதற்கு முரணான 1993 இல், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள், அரசுடைமையாக்கப்பட்ட வியாபார நிறுவனங்கள், அரச வங்கிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை 3 சதவீதத்தால் நலிவுற்றது. இதற்கு மக்கள்மயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அரசுடைமையாக்கப்பட்ட தொழில் முயற்சிகள் சில தனியார் துறைக்கு மாற்றப்பட்டமை ஓரளவு காரணமாகும்.

அட்டவணை 1.42

**அரசதுறைத் தொழில்நிலை**

| விடயம் | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|
| 1. மத்திய அரசு, மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் | 652,600 | 653,959 | 691,398 |
| 2. அரசுசார் நிறுவனங்கள் | 654,400 | 637,271 | 618,794 |
| மொத்தம் | 1,307,000 | 1,291,230 | 1,310,192 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அரசதுறையில் மிகப்பெரிய தனித்தொகுதி ஊழியர்களாக உடலுழைப்பு வேலையாட்கள் விளங்கி, மொத்தத் தொழில் நிலையில் 37 சதவீதத்துக்கு வகைகூறியதைச் செய்தொழில் வகைப்படியான தொழில் நிலைப் பகுப்பு காட்டுகின்றது. ஆயினும் இவ்வகையில் தொழில்புரிந்தோரின் எண்ணிக்கை 1992 இன் 1.5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1993 இல் 3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சிக்கு (உடலுழைப்பு வேலையாட்களில் மிகப்பெரிய விகித சமமாக அமைந்த) தோட்டத் தொழிலாளர்களின் மொத்தத் தொகை முன்னைய ஆண்டிலும் 4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதே பொறுப்பாகும்.

தனியார் துறையின் தொழில் நிலைபற்றிய காலத்தொடர்த் தரவுகள் கிடைக்கப்பெறாமையால் முறையான தனியார்துறையின் தொழில் நிலையை மதிப்பிடுவதற்கு சேமநிதியங்களில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் போன்ற குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன. கடந்த 5 ஆண்டுக்காலத்தில் ஊழியர் சேமநிதியத்தின் செயற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் 1992 இல் அதிகரிப்பும் 5 சதவீதமாக இருந்தது. இப்போக்கு 1993 இலும் தொடர்ந்திருந்தது

என்பதற்கு சான்றுகள் உள்ளன. ஒப்புதலளிக்கப்பட்ட சேமநிதியங்களில் மொத்த தனியார் துறைத் தொழில்நிலை சிறிதளவு அதிகரித்திருந்ததாக மதிப்பிடப்பட்டது.

இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் தொழிற்பட்ட முயற்சிகளின் தொழில் நிலை 1992 இன் இறுதியில் 104,220 ஆக இருந்து, 1993 இன் இறுதியில் 122,165 இற்கு 17 சதவீதத்தால் அதிகரித்தது. இம்முயற்சிகளிலிருந்த தொழில் நிலையில் ஏறத்தாழ 44 சதவீதமானவை வர்த்தக உற்பத்தியிலீடுபட்டிருந்த 84 செயற்றிட்டங்களைக் கொண்ட கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தில் காணப்பட்டன. 1993 இல் கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் 5,160 பேர்களுக்குத் தொழில் வழங்கியது.

தொழிற்படை, தொழில்நிலை பற்றிய சில பயன்மிக்க தகவல்களை குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட காலாண்டுத் தொழிற்படை அளவீடுகள் காட்டுகின்றன. 1993 இன் 3 ஆம் காலாண்டுக்கான (வடக்கு கிழக்கு மாகாணங்கள் நீங்கலான) அளவீட்டின்படி வேளாண்மைத்துறை, மொத்தத் தொழில் நிலையில் ஏறத்தாழ 44 சதவீதத்துக்கு வகைகூறியவிடத்து, (விடுதியகங்கள் வியாபாரம் உள்ளடக்கிய) பணிகள் துறை, தயாரிப்புத்துறை ஆகியவற்றின் பங்குகள் முறையே 14 சதவீதத்துக்கும், 27 சதவீதத்துக்கும் வகைகூறின. கடந்த சில ஆண்டுகளில், வேளாண்மைத் துறையில் தொழில்நிலை தொடர்பான பங்கு படிப்படியாக குறைவடைந்தவிடத்து பணி, தயாரிப்புத் துறைகளின் பங்குகளில் அதிகரிப்புக் காணப்படுகின்றது.

அரசின் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கல் முறைசாராத் துறையின் தொழில் நிலையினை எடுத்துக்காட்டும் பயன்மிக்க குறிகாட்டியாகும். வருமானம் உருவாக்கும் தொழிற்பாடுகளுக்கான கடன் திட்டங்களின் கீழ் கொடுகடன் வசதிகள் தொடர்ந்து நீடிக்கப்பட்டன. சனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதல் மூன்று சுற்றுக்களின்கீழ் 1993 இன் இறுதியில் 197,459 பேர்கள் வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கையில் வெற்றிகரமாக ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

குறுங்காலத்தில் தொழிலாளர் மிகையை நீக்க உதவுவதில், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கான குடியகல்வு முக்கிய பங்கைத் தொடர்ந்து வகித்தது. இலங்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தால் நடாத்தப்பட்ட வானூர்தித் துறை அளவீடு 1993 இல் உரிமம்பெற்ற முகவரகங்கள், இலங்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகம், மற்றும் ஏனைய வழிகள் மூலம் மொத்தம் 129,076 பேர்கள் தொழில்களைப் பெற்றனர் என்றும் இது 1992 இனைவிட 4 சதவீதம் அதிகமானது என்றும் தெரிவித்தது.